வென்ற்வேத்வில் தமிழ்க் கல்வி நிலையம்
Wentworthville Tamil Study Centre Inc

PO Box 557 Wentworthville NSW 2145

info@wtsc.org.au
**www.wtsc.org.au**

# ஆண்டு 4-6 மற்றும் புகுநிலை வகுப்பு

- ஆண்டு 4-6 மற்றும் புகுநிலை வகுப்பு மாணவர்களிற்கு அவர்களின் வகுப்புகளில் தமிழ் அறிவுப் போட்டி நடைபெறும்.
- ஒவ்வொரு வகுப்புகளிற்கும் மாதிரி வினாக்கள் எமது இணையத்தளத்தில் தரவேற்றம் செய்யப்பட்டுள்ளது. நீங்கள் பாடசாலை இணையத்தளத்தில் (wtsc.org.au) இருந்து மாதிரி வினாக்களை தரவிறக்கம் செய்து கொள்ளலாம்.

## போட்டிக்கான வினாக்கள்

1. பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்கள்
2. படங்களிற்கான பெயர் சொல்லுதல்.
3. தமிழ் தொடர்பான பொது அறிவுகள்.

## போட்டி விதிமுறைகள்

1. 12 வினாக்கள் மாணவர்களிடம் கேட்கப்படும்.
2. 60% மான வினாக்கள் மாதிரி வினாக்களிலிருந்தும் 40% மான வினாக்கள் பாடப்புத்தகங்களில் கொடுக்கப்பட்ட விடயங்களிலிருந்தும் தெரிவு செய்யப்படும்.
3. மாணவர்களிற்கு வினாக்கள் வாசித்து காட்டப்படும். அவர்கள் சரியான பதிலை கூற வேண்டும்.
4. மாணவர்கள் ஒவ்வொருவராக உங்களிடம் கேட்கப்படும் வினாக்களிற்கு விடையளிக்க வேண்டும்.
5. ஒவ்வொரு வினாக்களிற்கும் 30 வினாடிகள் மாத்திரமே கொடுக்கப்படும்.
6. நடுவர்களாக வகுப்பு ஆசிரியர்களும் பெற்றோர் ஒருவரும் (பிள்ளைகள் அந்த வகுப்பில் இல்லாத பெற்றோர்) கடமையாற்றுவார்கள்.

## பரிசில்கள்:

முதல் மூன்று இடங்களை பெறும் மாணவர்களிற்கு பரிசில்கள் வழங்கப்படும்.
பங்குபற்றிய அனைத்து மாணவர்களிற்கும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.